செ.வெ.எண்: 309/2026 நாள்: 12.05.2026

**சேலம் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பாலின நிபுணர்–II (Gender Specialist) மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (IT Assistant) ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

சேலம் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பாலின நிபுணர்–II (Gender Specialist) மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (IT Assistant) ஆகிய பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளதாவது:

சேலம் மாவட்டத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்தவும், பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்களை கண்காணிக்கவும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) நவம்பர் 2023 முதல் சேலம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது சேலம் மாவட்டத்தில் உள்ள மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு (DHEW) ஒப்பந்த அடிப்படையில் 1 பாலின நிபுணர்–II (Gender Specialist) மற்றும் 1 தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். அதன்படி, இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பாலின நிபுணர் II (Gender Specialist) பணியிடத்திற்கு தொகுப்பூதியமாக ரூ.21,000/– வழங்கப்படும். வயது 35–ற்குள் இருக்க வேண்டும். கல்வித்தகுதியாக (PG in Social Work / Social Disciplines) சமூகப்பணி / சமூக ஒழுக்கங்கள் பாடப்பிரிவில் முதுகலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், அரசு / அரசு சாரா நிறுவனங்களில் பாலினம் சார்ந்த கருப்பொருள்களில் மற்றும் பெண்களுக்கான சமூகப்பணியில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள்" அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு தொகுப்பூதியமாக ரூ.20,000/- வழங்கப்படும். வயது 35-ற்குள் இருக்க வேண்டும். கல்வித்தகுதியாக (Graduation with working knowledge in computers/IT) கணினி/ஐடி பாடப்பிரிவில் இளங்கலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும். மேலும், அரசு அல்லது அரசு சாரா / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணங்கள் மற்றும் வலை அடிப்படையிலான அறிக்கையிடல் வடிவங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள்" அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள, தகுதியான நபர்கள் தங்களது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை 11.06.2026 அன்று மாலை 05.00 மணிக்குள் அறை எண் 126, மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்து பயனடையுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியரக வளாகம், முதல் தளம், அறை எண்.126, மாவட்ட சமூக நல அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

---

**செய்தி வெளியீடு:** செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம் மாவட்டம்

Salem 24x7 IPROSalem PRO Salem pro.slm PRO Salem